[28th March 1961

SRI S. M. ANNAMALAI : சிலவிடங்களில் சர்க்காரால் நடத்தப்படும் விழாக்களில் ஒரே ஒரு மதத்தைப்பற்றிய விழாக்கள்தான் நடத்தப்படுகின்றன, அவைகளில் அமைச்சர்களும் சில சமயங்களில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள். அப்படி அதில் கலந்து கொள்ளும்போது பல மதத்தினர்களும் அதில் கலந்துகொள்ள முடியாமல் போகிறது. ஆகவே, சர்க்கார் அப்படிப்பட்ட விழாக்கள் நடத்தக்கூடாது என்று உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மதத்தைப்பற்றி என்ன நடக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. உதாரணமாக தேங்காய் உடைத்து வைக்கிறார்கள். மதத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. அது மங்களகரமான நடவடிக்கையே தவிர எந்த மதச் சடங்கையும் அது சார்ந்ததாகச் சொல்ல முடியாது. இது போன்ற சடங்குகள் செய்யப் படுகிறதே தவிர மதச் சடங்குகள் நடப்பதாக எனக்குத் தெரியவில்லை.

SRI A. A. RASHEED : May I know whether lighting of "kuthuvilakku" is considered religious?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது, ஒளி கொடுப்பதற்காக. ஒளி, அறிவு ஒளியாக இருக்க வேண்டுமென்ற முறையில் அதன் சின்னமாக விளக்கு வைக்கப்படுகிறதே தவிர அதை மதச் சடங்காக கருத முடியாது.

SRI A. VEDARATHNAM : இந்த விழாக்களில் இறை வழிபாடு நடக்கிறது. அது மதச் சடங்காகக் கருதப்படுமா ? இந்தமாதிரி விஷயங்கள்கூட ஆட்சேபிக்கப்படுகிறதே.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆட்சேபணை வருவது, ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் இன்னொரு மதத்தைச் சார்ந்தவர்களைச் சொல்கிற அந்த அடிப்படையில் அல்ல. மதத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் கடவுள் வழிபாடு, அல்லது கடவுளைப்பற்றி பாடக்கூடாது என்று அவர்கள் மனதில் நினைத்துக்கொண்டு மற்ற மதத்தினர் பேரில் சாக்குச் சொல்லி குறைகூறுகிறவர்கள்தான் ஆங்காங்கு காணப்படுகிறார்களே தவிர இதுபோன்ற விஷயங்களை ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தினரை ஆட்சேபிப்பதாகத் தெரியவில்லை.

Inter-caste marriages (encouragement)

* 1141 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் முதல் சலுகை காட்ட ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஜாதிமத பேதம் ஒழிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை உடைய இந்த சர்க்கார், கலப்புத் திருமணம் செய்துகொள்வதால் ஜாதிமத பேதம் ஒழியும் என்று இச் சர்க்கார் கருதுகிறதா ? அப்படியானால் கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களுக்கு ஏதாவது சலுகைகள் தரக்கூடாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் உத்தியோகம் கொடுப்பதன்மூலம் ஜாதி மத பேதம் ஒழியும் அல்லது கலப்புத் திருமணம் செய்துகொள்ள இதுபோன்ற தூண்டுதல் வேண்டுமென்று சொன்னால் அப்படிப்பட்ட கலப்புத் திருமணம் நடக்காமல் இருப்பதே நல்லது, உத்தியோகம் கிடைக்காவிட்டால் நடந்த திருமணம் நடக்காமலே போய்விடும். அதுபோன்ற நிலை வரலாம்.

28th March 1961]

Sri K. VINAYAKAM : Apart from giving any kind of encouragement for these inter-caste marriages in the matter of employment or promotions in Government service, is it a fact that these kind of "irresponsible marriages" have not been recognised by Government?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not know what the hon. member means by "irresponsible marriages". Marriages are marriages. I do not know whether the hon. Member is aware of any "irresponsible marriage" (laughter).

Srimathi A. S. PONNAMMAL : கலப்புத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து, கல்யாணம் செய்துகொண்டு நாலைந்து குழந்தைகள் பிறந்த பின் விட்டு விட்டு ஓடிவிடுகிறார்கள். ஆகவே கலப்புத் திருமணமே கூடாது என்றுகூட வைக்கலாம், அல்லது முதலில் மணந்து விட்டு அவர்களைத் துறந்து, மறு கல்யாணம் செய்துகொள்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுத்து தக்க தண்டனை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களிடையே பிணக்குகள் ஏற்பட்டு ஓடிவிடுகிறார்கள் என்பதில்லை, எல்லாயிடங்களிலும் இது நடைபெறுகிறது. கலப்புத் திருமணம் நடைபெறுவதைப் பார்த்து அதில் நம்பிக்கையில்லாதவர்கள் கலப்புத் திருமணத்திலேதான் இதுமாதிரி ஏற்பட்டுவிட்டது என்று சொல்லக்கூடிய முறையில்தான் இது இருக்கிறதே தவிர ஆண் பெண்களிடையே கலப்புத் திருமணமாகயிருந்தாலும் சரி, வைதிக திருமணமாகயிருந்தாலும் சரி, எல்லாவற்றிலும் பிணக்குகள் ஏற்படலாம், பிரிவுகள் ஏற்படலாம். கலப்புத் திருமணங்களை மட்டும் தனியாக பிரித்துக் கூறுவது சரியல்ல என்பது என் கருத்து.

Sri K. ANBAZHAGAN : கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் பிறரால் ஒதுக்கி வைக்கப்படுகிற சூழ்நிலை இன்னும் பலவிடங்களிலும் இருப்பதால், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் அரசாங்கம் சில பல வகைகளில் சலுகை காட்டுவதைப் போன்று அந்த வகையில் சலுகை காட்ட முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது அம்மாதிரியாக ஒதுக்கி வைக்கப்படுவதாக எனக்குத் தெரியவில்லை. சில பேர்களுக்கு கௌவரம் ஏற்படுவதற்காகக்கூட கேள்விப்படுகிறேன்.

Ministers' tour (travelling allowance)

*1142 Q.—Sri S. M. ANNAMALAI : }
Sri T. S. RAMASWAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the total travelling allowance drawn by each Minister during the last financial year and during the six months ending on 30th September 1960;

(b) the total number of days within this period when each of them was in the City and the number of days during this period they were on camp outside the headquarters;

(c) the number of trips each had made and the official purpose for which they had gone; and

(d) the number of official functions they have participated and the nature of the functions?